# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 01 புதன்கிழமை 17.07.2024 கதிர் 303







# லயன் காம்பறாக்களை கிராமம் என்று சொல்லி காணி உரிமை கோரிக்கையை தூக்கி வீசாதீர்கள்

## ரணிலிடம் மனோ அணி தெரிவிப்பு



லயன் காம்பறாக்களைக் கிராமம் என்று சொல்லி, காணி உரிமை கோரிக்கையை குழி தோண்டிப் புதைக்காதீர்கள் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளது.

பெரும் தோட்டங்களில் வாழும் சுமார் 2 இலட்சம் குடும்பங்களை, தோட்ட நிர்வாகங்களின் நவீன அடிமைத்துவ பிடிகளில் இருந்து அகற்ற வேண்டும் என்பது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள முன்னணி கோரிக்கையாகும். அதைச் செய்யுங்கள். அதற்கு கொள்கை ரீதியாக ஆதரவு தருகின்றோம்.

2►

## உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் தயார் ஐ.தே.க. முக்கியஸ்தர் சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு



“ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவோ, அரசோ எந்தவித மறைமுக நடவடிக்கையையும் மேற்கொண்டதில்லை. ஆனால், எதிர்க்கட்சியே தேர்தலைப் பிற்போடுவதற்கான சதித்திட்டங்களை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவின் மீது குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆனால், உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் நாயகமுமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமையகமான சிறிகொத தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ஒரு சிலர் மறைமுகமாகச் செயற்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் வியாபாரி ஒருவரால் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை கேள்விக்குட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகச் செயற்பட்டு, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதை அமைச்சரவையில் உறுதிப்படுத்தியதுடன், உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை செல்லுபடியற்றதாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் தேவையான ஆலாசனைகளை வழங்கி இருந்தார். அதன் பிரகாரம் குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

ஆனால், குறித்த வழக்கைத் தாக்கல் செய்த நபர், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவரின் 2►

## சுகாதார அமைச்சரின் கூட்டத்தில் குழப்பத்தில் ஈடுபட்ட ஒருவர் கைது



யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் பங்கேற்புடன் இன்று நடைபெற்றது.

இதன்போது கூட்டத்தில் அழையா விருந்தாளியாகப் பங்கேற்ற ஒருவர் கலந்துரையாடலை முகநூல் வழியாக நேரலையில் ஒளிபரப்பியிருந்தார்.

இதனையடுத்து முகநூல் நேரலை செய்ய வேண்டாம் எனவும், அவரை அங்கிருந்து வெளியேறுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கவே அதனை மறுத்து அவர் தொடர்ந்து அமர்ந்திருந்தார்.

பின்னர் கூட்டம் நிறைவு பெற்றதை அடுத்து, சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே, கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் அவர் குழப்பத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து சத்தமிட்டவாறே ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கலந்துரையாடிய பிரதம செயலக அலுவலகத்துக்கு அவர் சென்று முரண்பாட்டில் ஈடுபட்டார். அதிகாரிகள் வெளியேறச் 2►

## சாவகச்சேரி பதில் வைத்திய அத்தியட்சகர் யார்? சர்ச்சைக்குச் சுகாதார அமைச்சர் முற்றுப்புள்ளி



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் தற்போது கடமையில் உள்ளவரே என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது நியமனம் பெற்று கடமையில் இருக்கும் அதிகாரியே வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகராக வைத்தியர் 2►

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் குழுவினர் விஜயம்



சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இன்று விஜயம் செய்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சரால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை விடுதிகள், சத்திர சிகிச்சைப் பிரிவுகளையும் யாழ். போதனா வைத்தியசாலையின் அரும்பொருட் காட்சியகத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்

அத்தோடு குருதி மாற்று சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் வழங்கி வைத்ததுடன் ஞாபகார்த்தமாக மரக்கன்றையும் நாட்டி வைத்தார். அமைச்சரின் இந்த விஜயத்தின்போது 2►

## லயன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், லயன் காம்பராக்கள்தான் புதிய கிராமங்கள் என்று நீங்கள் இன்று கூற முயல்வதை நாம் ஏற்க முடியாது. இனியும் எமது மக்கள் மலை உச்சிகளில் மலைசாதி பழங்குடி மக்கள் போன்று வாழ்வதை நாம் ஏற்க முடியாது.

மலை நாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு என்ற பொருளில், பெரும்தோட்டங்களில், காணி உரிமையுடன் கூடிய தனி வீட்டு புதிய கிராமங்களை அமைத்து காணி உரிமை கோரிக்கையை, உங்கள் ஆட்சியில், 2015ம் ஆண்டு முதல் அரசியல் ரீதியாக ஆரம்பித்து வைத்த கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியாகும். கடந்த வருடம், மலையக மக்கள் இந்நாட்டுக்கு வந்த 200 வருட பூர்த்தியை அரசியல் கட்சிகளும், தொழில் சங்கங்களும், சிவில் அமைப்புகளும் நினைவு கூர்ந்த நிகழ்வுகளில் மேல் எழுந்த பிரதான கோஷம், காணி உரிமை கோரிக்கை ஆகும்.

ஆகவே, லயன் காம்பராக்களை, “பெருந்தோட்ட புதிய குடியேற்ற கிராமங்கள்” என்று கூறி, இன்று மலையகம் முழுக்க எழுந்துள்ள காணி உரிமை கோரிக்கையை குழி தோண்டி புதைக்க வேண்டாம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி., எம். வேலு குமார் எம்.பி., எம். உதயகுமார் எம்.பி. ஆகியோர் அடங்கிய தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்து, இது தொடர்பான கட்சியின் நிலைபாட்டை தெரிவிக்கும் எழுத்து மூல ஆவணத்தையும் கையளித்துள்ளது.

லயன் குடியிருப்புகளை, “பெருந்தோட்ட புதிய குடியேற்ற கிராமங்களாக” அறிவிக்கும் உத்தேசம் கொண்ட தனது அமைச்சரவை பத்திரம் தொடர்பில் கலந்துரையாட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்று, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை தமிழ் முற்போக்குக் கூட்டணி தூதுக்குழு சந்தித்து உரையாடியது. இந்தச் சந்தர்பத்தில் த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி. உரையாற்றியபோது -

“2010ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் இருந்த வேளையில், பெரும் தோட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு, நெடுஞ்சாலை ஓரங்களில் வீடுகளை அமைக்க இடமளிப்பது மூலம்தான் அவர்களை தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே கொண்டு வர முடியும் என என்னிடம் நீங்கள் நேரடியாகக் கூறி இருந்தீர்கள்.

இது பற்றி 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி, உங்கள் அமைச்சராக இருந்தபோது உரையாற்றி இருந்தேன். அன்று நாம் நாடாளுமன்றத்தில் உங்கள் 40 ஆண்டுகால பொது வாழ்வைச் சிலாகித்து ஒரு நிகழ்ச்சியை நடத்தினோம். எனது உரையின் ஹன்சாட் பிரதியை உங்களுக்கு இன்று இப்போது தருகின்றேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி பின்வரும் ஆறு கோரிக்கைகளை கடமைபூர்வமாக உங்களிடம் முன்வைக்கின்றது.

* நீங்கள், எமது மக்களுக்கு உறுதி அளித்த வீட்டு வதிவிட காணிகளை, புவியல் ரீதியாக தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அண்மித்ததாக, அதிக பட்சம் 3 கிலோ மீட்டருக்கு உட்பட்ட ஸ்தலங்களில் வழங்குங்கள்.

* காணியின் விஸ்தீரணம், அந்த பிரதேச செயலக பிரிவில், காணி வழங்களின் போது கடை பிடிக்கப்படும் நடைமுறைக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

* காணி உரிமைப் பத்திரத்தின் சட்ட அந்தஸ்து, நாட்டில் ஏனைய பிரதேசங்களில் வழங்கப்படும் காணி உரித்து பத்திரங்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.

* காணி உரிமைப் பத்திரங்கள், குடும்பப் பெண் தலைவிகளின் பெயர்களில் வழங்க பட வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இது பற்றி மேலும் நிபந்தனைகள் இருக்குமாயின், உங்களுடன் தொடர்ந்து உரையாட த.மு.கூ. தயாராக இருக்கின்றது.

* திருமணமான ஒவ்வொரு தம்பதிகளும், ஒரு குடும்பமாக கணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் காணி வழங்கப்பட வேண்டும்.

* இயன்றோர், தமது காணிகளில் வீடுகளைக் கட்டிக் கொள்ளட்டும். இயலாதோர், அரச மற்றும் இந்திய, சர்வதேச வீடமைப்புத் திட்டங்களில் இடம்பெறட்டும்” - என்றார். (05)

## உரிய காலத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருங்கிய நண்பர். இதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்குச் சதித்திட்டங்களை மேற்கொள்பவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதேபோன்று தற்போது மீண்டும் தேர்தலைப் பிற்பாடும் நோக்கில் சட்டத்தரணி ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கும் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு நாட்டுக்குள் குழப்பகரமான நிலைமை ஒன்றை ஏற்படுத்தி, அதனை ரணில் விக்கிரமசிங்கவின் மேல் சுமத்துவதற்கான நடவடிக்கையே இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதைத் தடுப்பதற்கும் அவர் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதற்குமே இவ்வாறான நடவடிக்கைகளைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதனால் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார். அவர் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவார். அதேபோன்று பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதை சஜித், அநுர யாராலும் தடுக்கவே முடியாது.” - என்றார். (05)

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோபாலமூர்த்தி ரஜீவ் கடமைகளைப் பொறுப்பேற்ற நிலையில், விடுமுறையில் இருந்து வந்த வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் தானே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் என்று தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவா? கோபாலமூர்த்தி ரஜீவா? என்ற சர்ச்சை எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொல்லியும் தொடர்ந்து முரண்பாட்டை ஏற்படுத்தவே பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சாவகச்சேரி பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவும் அழையா விருந்தாளியாகப் பங்கேற்று முகநூல் நேரலை செய்தமையும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## யாழ்.போதனா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார அமைச்சின் செயலாளர் மஹிபால மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கயன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## தேர்தலைப் பிற்போட முயன்றால் நாட்டில் இரத்தக்களறி ஏற்படும்!

### மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் போட்டியிடவுள்ளதாகவும், அதற்கான வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் எனவும் அதனை எந்த வகையிலும் ஒத்திவைக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் நாட்டில் ஆயிரக் கணக்கானோரின் இரத்தக்களரி ஏற்படலாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (04)

## டயான கமகேயின் மனு வாபஸ்!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் அவர் தாக்கல் செய்த மனு இன்று வாபஸ் பெறப்பட்டது.

இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த மனுவை தொடர வேண்டிய அவசியம் இல்லை, என டயானா கமகே சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, அதனை வாபஸ் பெற அனுமதிக்குமாறு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி, மனுவை வாபஸ் பெற உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. (04)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# தமிழ்ச்சங்கத்தின் ஆடிப்பிறப்பு விழாவும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்





யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்நடத்திய ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்நினைவரங்கமும் இன்று புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர்தி.வேல்நம்பிதலைமையில் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் நவாலியூர் சோமசுந்தர புலவரின் திருவுருவச் சிலைக்கும் பாடசாலை நிறுவுனர் பண்டிதர் தம்பையாவின் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தொடர்ந்து பாடசாலை அதிபர் கி. கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும் ஜீவா. சஜீவன் தொடக்கவுரையையும் வழங்கினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறைப்பேராசிரியர்செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் யாழ்ப்பாணம் மறைக்கோட்ட முதல்வரும் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவருமாகிய அருட்பணி ஜெரோ செல்வநாயகம், யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர்களான கலாநிதி விஜயபாஸ்கர், ம. சத்தியகுமார், இ. சர்வேஸ்வரா நடனத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி கி. அருட்செல்வி, தமிழ்ச்சங்க பொருளாளர் லோ. துஷிகரன், ஆட்சிக் குழு உறுப்பினர்காளான ந. ஐங்கரன், செ. நிவேதன், விரிவுரையாளர் வேல் நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் நிகழ்வின் நிறைவில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன




# மிதி வெடி




ஊரில நடக்கிறதை பாத்தால் என்ன சொல்லுறதெண்டு விளங்கேல்லப் பாருங்கோ....

பெரிய பெரிய பிரச்சினைகளுக்கெல்லாம் பழக்கப்பட்ட எங்களுக்கு உவர் சொல்லுறது சின்னப் பிரச்சினையள் கண்டியளே? அதிலும் எங்கடை ஆக்கள் ஒண்டுமே இல்லாததையே ஊதிப் பெருசாக்கி – அதுதான், ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கிறதில விண்ணர்கள் பாருங்கோ!

இஞ்ச பெருமாளே கிடைச்சிருக்கு, சும்மா விடுவினமோ?

பேஸ்புக் போராளிகள் எல்லாம் சேர்ந்து பெருமாளைத் தேரில ஏத்தி ஒரு சுற்றுலா கொண்டுபோவம் எண்டு வெளிக்கிட்டவை. ஊர் சேர்ந்து தேர் இழுக்கப்போகுது எண்டு கொஞ்சப்பேர் சுத்தி நிண்டு வெளிச்சம் பிடிச்சு உலகமெல்லாம் காவித்திரிஞ்சினம். இவ்வளவும் நடக்கும்போது தேருக்கு வழி சொல்லவோ அல்லது சரியான பாதைக்குத் திருப்ப சறுக்காங்கட்டை போடவோ ஆளில்ல எண்டதை ஒருத்தரும் கவனிக்கேல்ல!

ஆனாப் பாருங்கோ, பெருமாள் எண்டு நினைச்சு தேரேத்தி தெருவுக்குக் கொண்டுவந்து வெளிச்சத்தில வச்சுப்பாத்தா அது பெருமாள் இல்ல பிசாசாக் கிடக்குது எண்டு அரைவாசிப்பேர் தேரின்ர வடத்தை விட்டிட்டு ஓடிற்றினம். அதிலும் சிறப்பு என்னெண்டால் பெருமாளாகத் தெரிஞ்சாளை ஓவறா வெளிச்சம் பிடிச்சு, பிசாசாக்கின ஆக்கள் தங்கட தேவை முடிஞ்சோண்ண அமைதியாயிட்டினம். இப்ப அந்தாள் தேரோட நடுத்தெருவில நிக்குது!

மற்ற எல்லாரையும் தெருவுக்கு இழுத்துவிடுவன் – செஞ்சு விடுவன் – தொப்பி... தொப்பி... எண்டு சுதந்திரமாத் திரிஞ்ச மனுசன "தேர் ஏத்தி"க் கொண்டுவந்து "கார் விக்க" வச்சிட்டீங்களே! இதுக்குமேல நான் சொல்லுறதுக்கு என்ன இருக்கு?

உந்த பேஸ்புக்கைத் திறந்தா ஒரே இந்தப் பிரச்சினைதான் ஓடுது. அதவிடப் பெருசா நான் என்னத்தைச் சொல்லப்போறன்?

வடிவேல் பாணியில சொல்லுறதெண்டால், 'எது பண்ணினாலும் பிளான் பண்ணிப் பண்ணனும்'. அவ்வளவுதான்!!

தம்பியின்ர விசயத்தில பேஸ்மண்ட் ஸ்ரோங் – ஆனால் பில்டிங்தான் படுவீக்!

வயசான காலத்தில நானும் அடிக்கடி ஆஸ்பத்திரிப்பக்கம் போ-கோணும் எண்டதால இதோட நிப்பாட்டிறன். ஆனாலும் அந்த ஸ்ரோங்கான பேஸ்மண்டில நல்லாப் பிளான் பண்ணி ஒரு ஸ்ரோங்கான பில்டிங் கட்டினா எல்லாரும் நல்லா இருக்கலாம்!

நரமுனி

# 2020 தேர்தலில் எந்தவொரு ஆசனத்தையும் பெற முடியாத ரணில் 50 ஆசனம் பெற்ற எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுப்பது வினோதம்!

## தொலைநோக்குப் நம்மிடமே உள்ளது என்கிறார் புத்திக பத்திரன எம்.பி.



கடந்த தேர்தல்களில் நாட்டு மக்கள் தலைவர்களை வெற்றி பெறச் செய்து வந்தனர். ஆனால், இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்வதென்பது உருப்படியான ஒரு வேலைத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், “நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கும், நாட்டை கட்டியெழுப்புவதற்கும் குறுகிய கால தீர்வுகளை கொண்ட வேலைத்திட்டமே வெற்றியை கொண்டு வரும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டின் தலைவர்களை தெரிவு செய்கையில் தனி நபர்களையே இதுவரை வெல்லச் செய்து வந்த இந்நாட்டின் மக்கள், இனிமேல் தனி நபர்களை அன்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றோம். இவ்வாறான வேலைத்திட்டத்தையே ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு சஜித் பிரேமதாச மற்றும் குழுவினர் தலைமைத்துவத்தை வழங்குவார்கள். இவ்வேலை திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கான முன்னடுப்புகளை ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீள இணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியினரை அழைக்கின்றார், 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாட்டின் இரண்டாவது தனிப்பெரும் அரசியல் சக்தியாக உருவெடுத்த ஐக்கிய மக்கள் சக்தி, தாம் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே 50க்கும் மேற்பட்ட ஆசனங்களை வெற்றி பெற்று பிரதான எதிர்க்கட்சியாக மாற முடிந்தது. இத்தகைய பின்னணியில் தான் 2020 பொதுத் தேர்தலில் எந்தவொரு ஆசனத்தையும் பெற முடியாத ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பது வினோதமானதாகும்

டி.எஸ்.சேனநாயக்க அவர்கள் ஆரம்பித்து வைத்த கட்சியின் உயிரோட்டம் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் தான் உள்ளதுடன், அந்த முன்னோடிகளின் அனுபவங்களை நிகழ்காலத்துடன் இணைத்து மக்களை எதிர்காலத்திற்குக் கொண்டு செல்லும் தொலைநோக்குப் பார்வை ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளது.

தெற்காசியாவிலும் ஆசியாவிலும் வளர்ச்சி அடைந்த நாடு என்ற இலக்கை எட்டுவதற்கான வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் மட்டுமே உள்ளது!” - என்றார். (ரெஜ-

# வெட்டிச் சாய்த்த மரத்தில் சிக்குண்ட நபர் மரணம்!

நமுனுகுல கந்தசேன தோட்டப் பகுதியில் இன்று வெட்டிச் சாய்க்கப்பட்ட மரம் ஒன்றில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் 66 வயதுடைய நமுனுகுலை கனவல்ல 13 ஆம் கட்டைப் பகுதியை சேர்ந்த வேலு கருணாகரன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தின் உரிமையாளர் தனது காணியில் உள்ள கரப்பன்டைன் மரத்தினால் தனது வீட்டுக்கு ஆபத்தான விளைவுகள் ஏதும் ஏற்படக்கூடும் என எண்ணி, சட்டபூர்வமாக அனுமதிப் பத்திரத்தைப் பெற்று குறித்த மரத்தை இன்று காலையில் வெட்டியுள்ளார்.

இதன்போது இடத்தின் உரிமையாளர் உட்பட மேலும் சிலர் மரத்தை வெட்டியதாகவும், மரம் குறித்த வீட்டுப் பகுதியில் விழாமல் இருக்க மரணித்த நபர் உட்பட மேலும் இருவர் மரத்தில் கயிறைக் கட்டி வேறொரு திசைக்கு இழுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது மரம் சாயப் போவதை உணர்ந்து மரத்தை இழுத்த மூவரையும் ஓடுமாறு மரத்தை வெட்டியவர்கள் கூறியதாகவும் இதன்போது இருவர் வேறு திசையை நோக்கி ஓடியதாகவும் மரணித்த நபர் மரம் சாய்ந்தம் திசையில் ஓடியதாகவும் கூறப்படுகிறது. அப்போது, மரத்தின் கிளைகள் குறித்த நபரின் மீது வீழ்ந்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து நமுனுகுலை பொலிஸ் நிலையம் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திலேயே காணப்படுவதாகவும், இருப்பினும் குறித்த பகுதி ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி என்பதால் சுமார் 25 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ஹிங்குருகடுவ பொலிஸ ாரேசம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் ஊர் மக்கள் தெரிவித்தனர்.

தமது இடத்திற்கு ஹிங்குருகடுவ பொலிஸார் வருகை தருவதற்கு சுமார் 1 மணித்தியாலமும் 30 நிமிடங்களும் தேவைப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(04)



# வடக்கு மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, வடக்கு மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பிலும், மேம்படுத்தப்பட வேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன். சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் விசேட வைத்தியர்கள், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்களுக்கு இலவச வீட்டு உரிமைப்பத்திரம் வழங்கல்

*கொழும்பு மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்களுக்கு இலவச வீட்டு உரிமைப்பத்திரத் திட்டமான “ரண்தொர”வினால் பாரம்பரிய உரிமைப்பத்திரம் இன்றையதினம் வழங்கப்படுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ எஸ்.சத்யானந்த தெரிவித்தார்.*

*2024 வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட, கொழும்பு நகரம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச வீட்டு உரிமைப் பத்திரம் வழங்கும் விசேட திட்டத்தின் படி இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.*

*அத்துடன், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வழிகாட்டலுடன், அமைச்சின் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மற்றும் அந்த நிறுவனங்களின் அனைத்து அதிகாரிகளின் ஆதரவுடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.*

*நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானம் பெறும் வீட்டு உரிமையாளர்களுக்கு பல வருடங்களாக இலவச வீட்டு உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதில் சில தடைகள் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் சத்யானந்த, சட்ட விடயங்கள் மற்றும் கொள்கை விடயங்கள் காரணமாக வீட்டு உரிமம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார். (04)*

# ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடு செலவு மதிப்பீடு உடனே தேர்தல் ஆணைக்குழுவிற்கு

ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான மொத்த செலவுகள் குறித்த மதிப்பீடு உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் பிரிவு மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் செலவுகள் அடங்கிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது நிலையமொன்றுக்கு குறைந்தது இரண்டு உத்தியோகத்தர்களையாவது நியமிக்க வேண்டுமென பொலிஸார் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# ஜனாதிபதி புலமைப்பரிசில் தேசிய நிகழ்ச்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்திட்டத்திக்கு அமைவாக பொருளாதார நலிவு நிலையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் திறமையுள்ள ஒரு லட்சம் மாணவர்களுக்கும், கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்கள் 6000 பேருக்கும், புலமைப் பரிசில் வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வானது மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்ரினா முரளிதரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 1500 மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமை பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான சதாசிவம் வியாழேந்திரன், சந்திரகாந்தன் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம் அதாஉல்லா, அலி ஸாஹிர் மௌலானா, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் உட்பட கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# காத்தான்குடி நகர சபைக்கு சுற்றுப்புற சூழலுக்கான "ஜனாதிபதி விருது"



பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 11 ஆவது ஜனாதிபதி சூழல் விருதுகள் வழங்கும் நிகழவில் காத்தான்குடி நகர சபை வெண்கல விருதை வென்றெடுத்தது. மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இவ்வைபவத்தில் விருதுகளைப் பெற்றுக்கொண்டன. தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக இவ்விருதை கைய கப்படுத்தியிருக்கும் காத்தான்குடி நகர சபையானது இவ்வெற்றிக்காக உழைத்த சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மற்றும் முன்னாள் கௌரவ தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளது.




# ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 30 போட்டிகளில் மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவு



(திகாமடுல்ல மாவட்ட செய்தியாளர் றம்ஸீன்)

அக்கரைப்பற்று கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 2024 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில், ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலயம் மொத்தமாக 31 இடங்களைப் பெற்றுக்கொண்டது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 21 போட்டிகளும் பெண்கள் பிரிவில் 9 போட்டிகளும் இடம் பெற்றன

இதில் 18 முதலாம் இடங்களையும், 12 இரண்டாம் இடங்களையும் மூன்றாம் ஒன்றினையும் இப்பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

# ரணில் விக்கிரமசிங்க சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவார்! பொருளாதார தீர்வுகளை தரக் கூடிய தலைவர் அவர் மட்டுமே ஆவார்

## அவரது வெற்றியை மக்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்கிறார் அகிலவிராஜ்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் நேற்று (16) தெரிவித்தார்.

நாட்டில் அரசியல் பிரச்சினையல்ல பொருளாதாரப் பிரச்சினையே இருப்பதாகவும், அரசியல் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் சிலருக்கு இருந்தாலும், பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவே எனவும் அவர் குறிப்பிட்டார்.

வீழ்ச்சி கண்டிருந்த நாட்டை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மீட்டு முன்னேறிச் செல்வதற்கு ஜனாதிபதி பாடுபட்டுள்ளார் எனவும், அதனை மக்கள் புரிந்து கொண்டு அவர் மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு வருவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும், மக்கள் தவறான முடிவெடுத்து நாடு மீண்டும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தால் அதற்காக வருந்துவதில் அர்த்தமில்லை எனவும் அகிலவிராஜ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்கள் இருந்தாலும், நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ மாத்திரமே பொருளாதார பார்வையை முன்வைப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெஜ-42)



# மொட்டுக் கட்சியியை சேர்ந்த வேட்பாளரையே பெரும்பான்மையானவர்கள் விரும்புகின்றனர்!

## பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவிப்பு



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் ஒருவர் போட்டியிட வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மையினரின் கருத்தாக உள்ளது. ஆனால், இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தற்போது தொகுதி அடிப்படையில் கூட்டங்களை நடத்தி கட்சியை பலப்படுத்துவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றியடையச்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சுற்றி அணி திரண்டுள்ளதாகவும், மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்கால அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்கான நோக்கில் தமது கட்சி செயற்படுவதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-43)








## மட்டக்களப்பு மகாஜனா கல்லூரியின் 149 ஆண்டு சிறப்பு விளையாட்டு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி பெண்கள் தேசிய பாடசாலையின் 2024 ஆண்டில் தமது 149 ஆவது வருடத்தினை சிறப்பிக்கும் முகமாக மட்டக்களப்பு இந்துகல்லூரி மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பில் மகாஜன கல்லூரி வரலாற்றுப்பதிவு செய்த ஸ்தாபகர் ஜோன் ஹில்னக் அடிகளாரினால் 1875 ஆனி 29 திகதி பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு 149 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதை சிறப்பிக்கும் முகமாக கல்லூரியின் அதிபர் எஸ். சாந்தகுமார் தலைமையில் மேற்படி விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடாகியிருந்தன.

இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ராஜகுமாரி கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி, கரைப்பந்தாட்டம், கயிறு இழுத்தல் போட்டிகள் மற்றும் பழைய மாணவர்களின் நடனங்கள், தெரு நாடகம் ஆகியனவும் அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

இந்நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## 32 வருட அரச சேவை பூர்த்தி நிருவாக உத்தியோகத்தர் ஓய்வு



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும் கடமையாற்றி, தனது 32 வருட சேவையினை வழங்கி ஓய்வுபெறும் தெய்வநாயகம் மோகனராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது

அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவரது சேவை பற்றி பலரும் உரையாற்றி, கௌரவித்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY
REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!